பாடம் 5

ஏப்ரல் 27 - மே 3

# குடும்பங்களுக்கு ஞான வார்த்தைகள்



## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *நீதிமொழிகள் 5:3-14; மத்தேயு 19:5; 1கொரிந்தியர் 7:3,4; நீதிமொழிகள் 13:22; 14:26; 23:13,14; 17:22; 31:10-31.*

**மனன வசனம்:** உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீதிமொழிகள் 3:5,6.

நாம் இப்போது நம் வாழ்வின் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், துவங்கும்போது ஓர் அம்மா-அப்பாவோடு தொடங்கி இருப்போம். பிறந்தபிறகு அவர்களோடு உள்ள உறவு ஒருவேளை சரியில்லாமல் போயிருக்கலாம். சிலருக்கு உடன்பிறந்தவர்களோ, உறவினர்களோ இருப்பார்கள். சொந்தக் குடும்பம் இல்லாமல் இருக்கலாம்.

எல்லாச் சூழ்நிலைகளுக்கும் நீதிமொழிகளில் ஆலோசனைகள் உள்ளன. குடும்ப உறவுகளைப்பற்றி நேரடியாக அது பேசுகிறது. நம் வீட்டில் அந்த ஞானமுள்ள வார்த்தைகளை நாம் பயன் படுத்தலாம். ஒரு பக்தியுள்ள வாழ்க்கையின் திறவுகோல்களை பெற்றோர் தங்கள் பிள்ளைக்கு கொடுப்பதாக அது பேசுகிறது. கல்லூரிக்குப் போன, தனியாகக் குடியேறின, அல்லது வேலைக்காக வெளியூர் சென்ற ஒரு பிள்ளைக்கு ஆலோசனைகூறி பெற்றோர் அனுப்பிய கடிதம் போலிருக்கிறது. "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே" என்று நீதி 1:8 சொல்கிறது. 'பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு தங்கள் நம்பிக்கையைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்' என்று உபாகமம் சொல்கிறது. அதைத்தான் நீதிமொழிகள் செய்கிறது. அதில், நம்முடைய பரம தகப்பனின் சத்தத்தைக் கேட்கிறோம்.

*2019, மே 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## ஞாயிறு ஏப்ரல் 28

# சரியான பெண்ணை நேசியுங்கள்

**கேள்வி: திருமணத்திற்கு வெளியே செய்யும் தவறான பாலியல் உறவுபற்றி நீதிமொழிகள் 5:3-14 சொல்கிற விளைவுகளைப் பட்டியலிடுங்கள்.**

பக்தியுள்ள ஒரு நபர் தன்னுடைய தாம்பத்திய உறவை திருமண பந்தத்திற்குள் வைத்துக்கொள்வார். நீதிமொழிகளில் ஆண்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அவை பெண்களுக்கும் உரியவை தாம். உன்னதப்பாட்டு 4:12_15 ஐ ஒப்பிட்டுப் பாருங்கள். தவறான ஈர்ப்பு பலமுள்ளதாக இருக்கலாம். ஆனால், இந்தப் பாவத்தின் விளைவுகள் மிக மோசமானவை. பொறுப்பு இல்லாமல் சிற்றின்பம் மாத்திரம் தேடுதலில் நல்லதொரு நெருக்கமான உறவு இல்லை. இதனால், சரீர, உணர்வுபூர்வமான கேடுகள் உண்டு. முக்கியமாக, நாம் செய்கிற தீர்மானங்களுக்கு தேவனிடம் கணக்கு கொடுக்கவேண்டும்.

தாம்பத்தியம் என்பது மனிதர்களுக்கு தேவன் கொடுத்திருக்கிற மாபெரும் ஈவுகளில் ஒன்று. ஆனால், இதை திருமண பந்தத்திற்குள் அனுபவிக்க வேண்டும். மாற்கு 19:5; 1கொரி 7:3,4, எபிரெயர் 13:4. கணவன்-மனைவி உறவின் மகிழ்ச்சியை ஜீவ ஊற்றுக்கு ஒப்பிடுகிறது நீதிமொழிகள் 5:18. 'உன் இளவயதின் மனைவி' என்று சொல்வதால், முதிர்வயதிலும் அவர்கள் அன்பு நிலைத்திருக்கும் என்று தெரிகிறது. மனைவியின் நேசத்தால் கணவன் எப்பொழுதும் மயங்க வேண்டும் என்கிறது நீதிமொழிகள் 5:19.

மனிதன் பாவ நிலையில் இருப்பதால், தாம்பத்தியத்திலும் தேவ திட்டத்தைவிட்டு அவன் விலகிச்செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும், சிந்திப்பதற்கும் தெரிவுசெய்வதற்கும் தேவன் நமக்கு பெலன்தந்திருக்கிறார். சோதனைகளை நாம் தொடர்ந்து அடக்கியாக வேண்டும். தேவ திட்டத்திற்குள் நாம் உறுதியாக இருக்கும்போது, தவறான உறவுகள் ஏற்படுவது தடுக்கப்படும். வாழ்நாள் முழுவதும் திட்டப்படி திருமணத்தில் உறுதியாய் இருப்பதே புத்திசாலித்தனம்; அதனால், ஏராளமான நற்பலன்கள் கிடைக்கும்.

திருமண வாழ்வை அழிக்கக்கூடிய பாலியல் சோதனையுடன் ஒருவர் போராடிக் கொண்டிருந்தால், நீங்கள் அவருக்கு என்ன ஆலோசனைகொடுப்பீர்கள்?

# பிதாக்களுக்கு அழைப்பு

**கேள்வி: தந்தையின் குணாம்சங்களால் குழந்தைகள் வாழ்வில் நீண்ட கால விளைவுகள் ஏற்படும். நீதிமொழிகள் சொல்கிற குணாம்சங்கள் யாவை?**

நீதி 13:22; 27:23,24 ______________________________

நீதி 14:26 ______________________________

நீதி 15:1,18; 16:32 ______________________________

நீதி 15:27 ______________________________

நீதி 29:17 ______________________________

ஒரு தந்தையின் குணம் தன் பிள்ளைகள்மேல் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தந்தையிடமிருந்துதான் அவர்கள் ஆதரவையும் பாசத்தையும் வழிநடத்துதலையும் முன்மாதிரியையும் எதிர்பார்க்கிறார்கள். குடும்பத்திற்கு தேவையானதை சம்பாதித்து, நல்ல முறையில் நிர்வாகம்பண்ணுகிற தந்தைமாரையே நீதிமொழிகள் புகழ்ந்து பேசுகிறது. பேராசைபிடித்தவர்கள் பல வழிகளில் தங்கள் குடும்பத்திற்கு அழிவைக் கொண்டுவருகிறார்கள். வேலையைவிட குடும்பத்திற்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பக்தியான தகப்பன்மார் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்தி, பொறுமையோடு இருப்பார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கண்டிப்பார்கள்; ஆனால், தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தமாட்டார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சரியான பாதையைக் காட்ட விரும்புவார்கள்; அதைச் செய்வதற்காக, வேதாகமத்தின் போதனையை அறிந்துகொண்டு, தேவனைப் பின்பற்ற விரும்புவார்கள்.

ஒரு தந்தை தனது குழந்தைகளுக்கு செய்யக்கூடிய மிக அவசியமான செயல், அவர்களுடைய அம்மாவை நேசிப்பது ஆகும். அப்படி அன்புகாட்டாமல் இருந்தால், பிள்ளைகள் வாழ்வை பெரிதும் பாதிக்கிறது; பெரியவர்களான பிறகும் இந்தப் பாதிப்பு தொடர்கிறது.

தேவனுக்கு உண்மையாயிருத்தல், திருமண வாழ்வில் அக்கறையோடு நடத்தல், தனிவாழ்விலும் சமுதாய வாழ்விலும் நேர்மையாயிருத்தல் ஆகியவைபற்றி நீதிமொழி அதிகம் பேசுகிறது. தனிமனிதனின் உள்ளம் இருக்கிற நிலைதான் வெற்றிக்கு அடிப்படை. தாம்பத்தியம், செல்வம், அதிகாரம் போன்றவற்றில் தவறு செய்வதற்கான ஈர்ப்புகள் அதிகம். ஆனால், ஞானமுள்ள தகப்பன் தேவ உதவியோடு எப்போதும் சரியான தெரிவை செய்வான்.

இங்கே சொல்லப்பட்டுள்ள நீதி நெறிகள் ஒரு தகப்பனுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் முக்கியமானவைதாம். எவ்வாறு? உங்கள் செயல்கள் எவ்வாறு குழந்தைகளை நன்மைக்கோ தீமைக்கோ பாதித்திருக்கின்றன? எப்படியெல்லாம் நீங்கள் கவனமாக இருக்கவேண்டும்?

## செவ்வாய் ஏப்ரல் 30

# அன்போடு திருத்துதல்

**கேள்வி: சிட்சை, திருத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவம்பற்றி நீதிமொழிகள் என்ன சொல்கிறது? நீதி. 10:17; 23:13,14; 29:1; 29:15.**

---

சமுதாயம் ஏற்றுக்கொள்ளாத நடத்தைகளைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக, பெற்றோர் தங்கள் பிள்ளைகளக் கண்டிக்கிறார்கள்; தாங்கள் சொன்னதைக் கேட்காவிட்டால், தண்டிக்கிறார்கள்; தங்களைச் சங்கடப்படுத்தினால், கோபப்படுகிறார்கள். ஆனால், தேவன் சிட்சிப்பதற்கு நோக்கம் வேறு. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்பைப்பற்றிப் பேசும்போது, சிட்சையைப்பற்றி நீதிமொழிகள் பேசுகிறது. நீதி 19:18. தங்கள் பிள்ளைகளுக்கு பாவ இயல்பு இருக்கிறது என்பது பக்தியான பெற்றோருக்குத் தெரியும். ஒரே ஒரு வல்லமைமாத்திரமே, அந்த இயல்பைக் கட்டுப்படுத்த முடியும். அது இயேசுவின் வல்லமை. குழந்தைவளர்ப்பில் ஒரு கிறிஸ்தவப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தேவனிடம் நடத்துவதுதான் முக்கியமான செயல்.

கிறிஸ்தவ சிட்சை என்பது, தண்டனைகொடுப்பதோ, தன் அதிகாரத்தை நிலைநாட்டுவதோ அல்ல; மீட்பிற்காகத் திருத்துவது ஆகும். அன்பான பெற்றோருக்கு பாவத்தின் வல்லமை எப்படிப்பட்டது என்று தெரியுமாதலால், தங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவிடம் நடத்த வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். தோட்டக்கலை நிபுணர் ஒருவர் இளஞ்செடியின்மேல் எப்படிப்பட்ட அக்கறைகாட்டுவாரோ, அதே விதமான அக்கறையை பெற்றோர் தங்கள் பிள்ளைகளின்மேல் காட்ட வேண்டும். பிள்ளைகள் வளர்ந்து தேவனை நம்புகிறவர்களாகவும், இரட்சிப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவதிட்டத்தோடு ஒத்துப்போகிறவர்களாகவும் மாறும்வரை, பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பாவத்திலிருந்து மீட்பதற்கு உறுதியானவிதத்தில் வழிகாட்ட வேண்டும்.

**கேள்வி: நீதிமொழிகள் 13:24; 23:13, 14 பெற்றோருக்குச் சொல்கிற செய்தி என்ன?**

எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும்போது ஒன்று தெரிகிறது: குழந்தை வளர்ப்பில் பிரம்பின் பயன்பாடுகுறித்து சில வசனங்கள்தாம் பேசுகின்றன. பரலோக மேய்ப்பன் தனது மந்தையை மேய்க்கும்போது, கோலை எவ்வாறு பயன்படுத்துவாரோ, அதைப்போலவே பெற்றோரும் பயன்படுத்தவேண்டும். சங் 23:4. பிள்ளைகள் வாழ்வில் மாற்றம் எதிர்பார்த்தால், பொறுமையாகக் கற்றுக்கொடுத்தல், மாறாத முன்மாதிரி, நல்ல உரையாடல், நெருக்கமான உறவு போன்றவை முக்கியம். உபா. 11:18,19. சிகிச்சை பலன்தந்து, பிள்ளைகள் மீட்கப்பட வேண்டுமென்றால், பெற்றோர் தங்களிடம் அன்பாக இருக்கிறார்கள் எனும் எண்ணம் குழந்தைக்கு இருக்கவேண்டும். நீதி 13:24.

---

கடுமையாகத் தண்டித்துவிட்டாலோ, சிட்சையைப் பிள்ளைகள் தவறாகப் புரிந்துகொண்டாலோ, அதைப் பெற்றோர் எவ்வாறு பிள்ளைகளோடு சரி செய்துகொள்ள வேண்டும்?

# வீட்டின் மூலையில் வாழ்வது நன்றாக இருக்குமா?

**கேள்வி: குடும்ப வாழ்வின் எரிச்சல்களை நீதிமொழிகள் எவ்வாறு நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறது? இந்த நகைச்சுவையின் விளைவு என்ன?**

'உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக' என்றே நெருங்கின உறவுகளில் நாம் ஒருவரையொருவர் நடத்துகிற விதம் குறித்து நீதிமொழிகளில் பல வசனங்கள் உள்ளன. வேதனையோடு இருக்கிறவனிடம் பாட்டுபாடுகிற உணர்வில்லாதவனைப்பற்றி நீதி 25:20 என்ன சொல்கிறது என்று பாருங்கள். மற்றவர்கள் தூங்கும்போது, விடியும்முன் எழுப்புகிற ஒருவன் உரத்த குரலில் ஆசீர்வதிப்பதைப்பற்றி நீதி 27:14 என்ன சொல்கிறது என்பதையும் பாருங்கள். சண்டைக்காரப் பெண்களைப்பற்றிச் சொல்லியிருப்பதுபோல, ஆண்களைப்பற்றியும் சொல்லியிருக்கவேண்டாமா என்று பெண்கள் கேட்பது புரிகிறது. ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்: காய்பா வீட்டிலும், அன்னா வீட்டிலும் வாழ்வது எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

மகிழ்ச்சியான இருதயத்தால் பயன் உண்டு. குடும்ப வாழ்க்கையில் நகைச்சுவை நல்லது. மனதில் எழும்பும் அழுத்தங்களை மகிழ்ச்சி குறைக்கிறது. மனமகிழ்ச்சி நல்ல ஒளஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும். நீதி 17:22. நம்மை எரிச்சல்படுத்துகிற சில நடத்தைகள் குறித்து நகைச்சுவையோடு நீதிமொழிகள் பேசும்போது, அதுவே ஒளஷதமாகத்தானே இருக்கிறது. அது ஒருவேளை நம்முடைய நடத்தையைக் கிண்டல்செய்யும்போது, அதைப் பார்த்துச் சிரிக்கிற நகைச்சுவையுணர்வு நமக்கு இருந்தால், மற்றவர்களுடைய நடத்தையைப்பற்றி, அவர்களிடம் அவர்களை எரிச்சல்படுத்தாமல் நகைச்சுவையோடு பேசமுடியும். நாம் தீவிர கவனம்காட்ட வேண்டிய முக்கிய பிரச்சனைகளை நகைச்சுவையாகப் பேசி, அலட்சியப் படுத்திவிடக்கூடாது.

ஒரு சாதாரண காய்ச்சல் மிக மோசமான ஒரு வியாதிக்கு அறிகுறியாக இருக்கலாம். அதேபோல, வாய்ச்சண்டையும் முணுமுணுப்பும் வேறே உறவு பிரச்சனையின் வெளிப்பாடாக இருக்கலாம். அடுத்தவர் தன்மேல் அதிகாரம்செலுத்த விரும்புகிறார் என்று நினைப்பதாலோ, தன்னைக்கட்டுப்படுத்த முயல்கிறார் என்று எண்ணுவதாலோ முணுமுணுப்பு வந்திருக்கலாம். பிரச்சனை சரியாக்கப்பட்டால்தான், அறிகுறிகள் நீங்கும். பிரச்சனையைப் புறக்கணிப்பதால், அது நீங்கப் போவதில்லை. ஆண்டவர்மேல் உள்ள அன்பையும், குடும்பத்தின்மேல் உள்ள அக்கறையையும் மனதில் வைத்து, கோபத்திற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, அந்தத் தேவைகளையும் உணர்வுகளையும் சரிப்படுத்த வேண்டும்.

---

வீட்டில் நகைச்சுவை ஏன் முக்கியமானதாக இருக்கிறது? எவ்வாறு அதை நன்மைக்காகப் பயன்படுத்தலாம்? எவ்வாறு தீமையாகவும் மாற்றலாம்?

# ஐசுவரியமுள்ள மனைவி

**கேள்வி: நற் குணசாலியான மனைவியின் நற்குணங்கள்குறித்து நீதிமொழிகள் என்ன சொல்கிறது? நீதி. 31:10-31.**

நீதிமொழிகள் 31:10-31 ஓர் ஆத்திச்சூடிக் கவிதையாக அமைந்துள்ளது. எபிரெய நெடுங்கணக்கில் உள்ள 22 எழுத்துகளும் வரிசையாக இந்த 22 வசனங்களில் முதலெழுத்தாக வருகிறது. ஒரு நல்ல மனைவியின் புகழைப் பேசுவதற்கு தேசிய எழுத்துகள் அனைத்தும் போதா என்றுதான் சொல்லவேண்டும்.

நல்லதொரு துணையைத் திருமணம்செய்வது பற்றி நீதிமொழிகள் காட்டுகிற முக்கியத்துவம் ரபிமார்களின் எழுத்துகளிலும் காணப்படுகிறது. "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாய் இருக்கிறாள்" என்கிறது நீதி 12:4. ஒரு நல்ல மனைவியைப்பற்றிப் பேசும்போது பலவிதமான திறன்களை நீதி 31 குறிப்பிடுகிறது: ஆடை நெசவு, நிலம்வாங்குதல், விவசாயம், குடும்பமேலாண்மை, நிதி மேலாண்மை. இவற்றுக்குமத்தியில் தன் குடும்பத்தை அவள் நன்கு கவனித்துக்கொள்கிறாள். குடும்பத்தார் அவள்மேல் அன்புவைத்து அவளைப் புகழுகிறார்கள்.

இங்கே சொல்லப்பட்டுள்ளத் திறன்கள் எல்லாம் ஒவ்வொரு பெண்ணிடத்திலும் இருக்கவேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது; இவ்வசனங்களை வைத்து, ஒரு கணவன் தன் மனைவியை எடைபோடவும்கூடாது. சரியாகச் சொன்னால், பெண்களிடம் மாத்திரமல்ல, ஆண்களிடமும் இந்தக் குணங்கள் இருக்கவேண்டும். நம்பகத்தன்மை, கருணை, உண்மை, கனிவு, சுறுசுறுப்பு போன்றவை எல்லோருக்கும் தேவைதானே. இந்த குணங்களின் இரகசியம் கர்த்தருக்குப் பயப்படுதலில் இருக்கிறது. நீதி 31:30.

நீதிமொழிகள் 31:10 இல், நற்குணம் என்று வருகிற சொல்லை வல்லமை, செல்வம் என்று மொழிபெயர்க்கலாம். யோசுவா 1:14 இல், வீரத்தை இந்த வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. ரூத் 3:11 குணசாலி என்கிறது. சங்கீதம் 62:10 இல், இந்த வார்த்தை ஐசுவரியம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "ஐசுவரியம், குணசாலி" என்கிற இந்த இரண்டு அர்த்தங்களை அடிப்படையாக வைத்து, நீதி 31:10 இல் வார்த்தை விளையாட்டு காணப்படுகிறது. உண்மையான ஐசுவரியம் ஒருவருடைய நற்குணத்திலும் நேர்மையிலும் கர்த்தருக்குப் பயப்படுதலிலும்தான் இருக்கிறது. விலையேறப்பெற்ற கற்களைக் காட்டிலும் இந்த குணங்களின் மதிப்பு அதிகம்.

உங்கள் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்துகிற குணசாலியான பெண்கள் யார்? பக்தியுள்ள பெண்களின் திறமைகள் லட்சணங்கள் ஆகியவற்றின் பட்டியலில் வேறு எதை நீங்கள் சேர்க்கலாம்?

## மேலும் படிக்க:

பரலோகத்தைநோக்கி, உங்கள் சிந்தையைத் திருப்புங்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயத்தை எல்லாக் காவலுடனும் காத்துக்கொள்ள வேண்டும். தேவனைப்பற்றித் தியானிக்க ஆசைப்படவேண்டும். பக்தியான சிந்தனையை வளர்த்துக்கொள்ளவேண்டும். வேதாகமத்தை தியானிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் செலவிடும் நேரம் வீணாகிறது என்று சிலர் முணுமுணுக்கிறார்கள். தேவன் எதற்காக இவற்றை செய்யச் சொல்கிறார் என்பதை உணர்ந்து இதை நீங்கள் பார்க்கவேண்டும். அப்போது பரலோக ராஜ்யத்தை நீங்கள் முக்கியப்படுத்துவீர்கள். பரலோகத்தைக்குறித்துச் சிந்திப்பவர்களாக நீங்கள் இருந்தால், உங்கள் நற்குணங்கள் பலப்படும்; உங்கள் கடமைகள் உயிர்ப்புடன் செய்யப்படும். பரலோக நன்மைகளை யோசிப்பதற்கு உங்கள் மனதைக் கட்டுப்படுத்தினால், உங்கள் எல்லா முயற்சிகளிலும் ஜீவனும் கருத்தும் இருக்கும். ஆன்மிக நன்மைகளில் நாம் வளராமல் இருக்கிறோம். வளரவேண்டும். எபே 4:13.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *“சோதனை நேரத்தில், மற்ற விசுவாசிகளோடு தொடர்புகொள்வது பலன் தருகிறது” என்று பல கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். ஜெபம், வேதபாடம், ஆவியானவரைச் சார்ந்திருத்தல் போன்றவற்றோடு விசுவாசிகளின் ஆதரவு என்பதையும் சேர்த்துக்கொள்ளலாமா? பாவம் செய்யுமாறு வருகிற தூண்டுதலை எதிர்க்கமுடியாமல் தவிக்கிற சமயத்தில் மற்றவர்களின் உதவியை நாடுவது எவ்வகையில் நல்லதாக இருக்கமுடியும்?*

2 *புதன்கிழமை இறுதிக் கேள்விக்கான பதில்களை உங்கள் வகுப்பில் தியானியுங்கள். சிரிப்பும் நகைச்சுவையும் நன்மையானவையாக இருந்தாலும், அவற்றைப் பயன்படுத்தி எவ்வாறு நாம் தீங்கு விளைவிக்கமுடியும்?*

3 *நீதிமொழிகள் 31 சொல்வதுபோல் அல்லாமல், தற்கால கலாச்சாரம் பெண்களுடைய வேறு எந்தத் தன்மைகளை உயர்த்திக் காட்டுகிறது? தற்கால தவறான கலாச்சாரப் பார்வையிலிருந்து நாம் எவ்வாறு நம்மைத் தப்புவித்துக் கொள்ளலாம்?*

4 *குடும்பவாழ்க்கைபற்றி வேதாகமம் சொல்லுகிற நியதிகளுக்கும், உங்கள் கலாச்சாரம் சொல்லுகிற நியதிகளுக்கும் என்ன வேறுபாடுகள் உள்ளன? எவற்றிலெல்லாம் கலாச்சாரமும் வேதாகமமும் ஒத்துப்போகின்றன? அவை எவ்வாறு நம்முடைய குடும்பங்களைப் பலப்படுத்த முடியும்?*

# குழந்தை பிறக்கிறது!

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ, அட்வென்டிஸ்ட் மிஷன்**

நகரங்களில் செய்யவேண்டிய ஊழியப்பணிகள் குறித்து ஓய்வுநாளில் பிரசங்கம் கேட்டு, அதற்கு தன்னை ஒப்புக்கொடுத்த மருத்துவர் ஒருவர், அட்வென்டிஸ்ட் சபையின் உலக தலைமையக கார் நிறுத்தத்தில், எதிர்பாராமல் ஒருவருக்கப் பிரசவம் பார்த்தார்.

பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் செல்லும் வழியில், பாதியிலேயே குழந்தை பிறக்க, அந்தப் பிரவசத்தைப் பார்த்த மருத்துவர்தான் யுவேட் சி. ரோஸ் ஹெப்ரான்.

"நாம் ஜெபங்களுக்கு ஏற்றபடி வாய்ப்புகளை அமைத்துக்கொடுப்பதில் நம் எஜமானை மிஞ்சி ஆளில்லை" என்கிறார் அவர்.

2017ம் ஆண்டு, உலக தலைமையகத்தில் நடந்த காரிய நிர்ணயக் கூட்டங்களில் தலைவர் டெட் சி. வில்சன் பேசினார். மருத்துவர்களும், சுகாதார நிபுணர்களும் நகர வாசிகளுக்குச் சேவைசெய்ய வேண்டியதின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். அப் போதுதான் தன்னை எடுத்துப் பயன்படுத்துமாறு ரோஸ் ஹெப்ரான் ஜெபித்தார்.

ஐந்து நாட்களுக்கு பிறகு, ரோஸ் ஹெப்ரானும் அவருடைய கணவரும் காரில் தலை மையகத்தைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தபோது, அங்கு ஒருவர் காரிலிருந்து இறங்கி, ஏதோ பதட்டத்தில் வெளியே குதித்ததைப் பார்த்தார். ரோஸ் ஹெப்ரான் தன் காரை நிறுத்தியபோது, "குழந்தை பிறக்கிறது" என்று அவர் கத்தியது கேட்டது. காருக்குள் அந்தத் தாயின் அலறலும் கேட்டது.

ரோஸ் ஹெப்ரானும் அவருடைய கணவரும் உடனே அங்குச் சென்றார்கள். சிறிது நேரத்தில் குழந்தை பிறந்தது. ரோஸ் ஹெப்ரான் வழிகாட்ட, அந்தக் குழந்தையின் தகப் பன், தன் சூ கயிற்றைக் கழற்றி, தொப்புள் கொடியில் முடிச்சுப் போட்டு, அதை வெட்டி விட்டார்.

தன் காரிலிருந்து ஒரு போர்வையை எடுத்து, அதில் அந்தக் குழந்தையைச் சுற்றி, குழந்தை நன்றாக மூச்சுவிடுவதை உறுதிப்படுத்தினார் ரோஸ் ஹெப்ரான். பிறகு, மருத்துவக்குழுவுக்கு தகவல் தெரிவித்தார் ஹெரால்ட் ஹெப்ரான். ஜெனரல் கான்ஃபரன் ஸின் பாதுகாவலர்களும் வந்து தேவையான உதவியைச் செய்தார்கள். பிறகு, அந்தத் தாயை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மருத்துவமனையிலும் அவர்களைச் சென்று சந்தித்தார் ரோஸ் ஹெப்ரான்.



"தேவதைபோல வந்து எனக்கு உதவினார்" என்று ரோஸ் ஹெப்ரானைப்பற்றி அந்தத் தாய் நன்றி பெருக்கோடு கூறினார்.

**"இது எல்லாமே என் ஜெபத்திற்குக் கிடைத்த பதில்தான். இது வேனுடைய திட்டமே" என்கிறார் ரோஸ்.**